[2023] 3 எஸ்.சி.ஆர். 165

இம்தியாஸ் அஹ்மத் மல்லா

–எதிர்–

ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில அரசு மற்றும் பலர்

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்.678/2021)

பிப்ரவரி 28, 2023

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. பீலா எம். திரிவேதி

பணிச் சட்டம் : பணியில் மீண்டும் பணியமர்தல் – மனுதாரருக்கு ஜம்மு மற்றும் காஷ்மீர் நிர்வாக காவல் துறையில் காவலர் பதவிக்கு பணி நியமனக் கடிதம் வழங்கப்பட்டது – குற்றவியல் வழக்கில் அவர் ஈடுபட்டுள்ளதை குறித்த தகவலை அவர் மறைத்துள்ளார் – அதன் காரணமாக அவரது நியமன ஆணை இரத்து செய்யப்பட்டது – பின்னர் அவருக்கெதிராக நிலுவையில் இருந்த குற்றவியல் வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார் – உயர்நீதிமன்றம் இரத்து செய்த உத்தரவை நீக்கறவு செய்தது – எதிர்மேல்முறையீட்டாளர் மேல் நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டது – மீண்டு பரிசீலித்ததன் பேரில், மனுதாரரின் குற்றப் பின்புலனை கருத்திற்கொண்டு அந்தப் பதவிக்கு தகுதியற்றவர் என காவல் தலைமை இயக்குனர் கண்டுள்ளார் – மீண்டும் பணியமர்த்தும்படி கோரி மனுதாரர் நீ.பே. மனு தாக்கல் செய்தார் – ஆயினும் தனி அமர்வு மற்றும் நீதியர் அமர்வு, காவல் துறைத் தலைவர்

முடிவை உறுதி செய்தது – மேல்முறையீட்டில் முடிவு : குற்றவியல் வழக்கில் விடுதலையானதால் மட்டுமே, பணியாளர் மீண்டும் பணியமர்த்துவதற்கு தகுதியுடையவராக்காது – காவல் துறையில் பணியாற்ற நேர்மையும் மேன்மையான நடத்தையும் தேவை – காவல் துறை படிநிலையில் உயர்ந்த அதிகாரியான காவல்துறை தலைமை இயக்குநர், காவல் படையில் மனுதாரர் சேர்ப்பதற்கான தகுதியை பரிசீலிக்கும் சிறந்த நடுவராவார் என்று கீழமை நீதிமன்றம் சரியாக தீர்மானித்தது – எனவே, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நியாயமாகவும் முறையாகவும் இருப்பதால், சட்டத்திற்கு முரணானதாகவோ குறைபாடுடையதாகவோ இல்லை – வகுமுறைக்கூறின் கீழ் அதிகார வரம்பை செலுத்த எந்தத்தலையீடும் தேவைப்படவில்லை – இந்திய அரசியலமைப்புச் சட்டம் – வகுமுறைக்கூறு 136 – ரன்பிர் தண்டனைச் சட்டம் – பிரிவு 379 – வனச் சட்டம் – பிரிவு 6.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் : வகுமுறைக்கூறு 136 – சிறப்பு மற்றும் தனிப்பட்ட அதிகாரத்தின் கீழ் – ஆள்வரை – முடிவு: அரிதான மற்றும் விதிவிலக்கான வழக்குகளில் பயன்படுத்தப்படவேண்டும்.

சொற்கள் மற்றும் சொற்றொடர்கள்: "முழுமையான விடுதலை தீர்ப்பிடப்பட்டது" – பொருள் விளக்கம்.

யூனியன் பிரதேசம், சண்டிகர் மாநில நிர்வாகம் மற்றும் பலர் –எதிர்– பிரதீப் குமார் மற்றும் ஒருவர் (2018) 1 **எஸ்.சி.சி. 797 : [2018] 1 எஸ்.சி.ஆர். 112;** காவல் ஆணையாளர், புது டெல்லி மற்றும் பலர் –எதிர்– மெஹர் சிங் (2013) 7 **எஸ்.சி.சி. 685 : [2013] 13 எஸ்.சி.ஆர். 432;**

நிர்வாகம் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா, புது டெல்லி –எதிர்– போபால் சிங் பஞ்சால் (1994) 1 எஸ்.சி.சி. 541 : [1993] 3 சப். எஸ்.சி.ஆர். 586; ஆர்.பி. கபூர் –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் ஒருவர் ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 787 : [1964] எஸ்.சி.ஆர். 431; அவதார் சிங் –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் பலர் (2016) 8 எஸ்.சி.சி. 471 : [2016] 7 எஸ்.சி.ஆர். 445 – குறித்து காட்டப்பட்டது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2018] 1 எஸ்.சி.ஆர். 112	குறிப்பிடப்பட்டது	பத்தி 4
[2013] 13 எஸ்.சி.ஆர். 432	குறிப்பிடப்பட்டது	பத்தி 9
[1993] 3 சப். எஸ்.சி.ஆர். 586	குறிப்பிடப்பட்டது	பத்தி 11
[1964] எஸ்.சி.ஆர். 431	குறிப்பிடப்பட்டது	பத்தி 11
[2016] 7 எஸ்.சி.ஆர். 445	குறிப்பிடப்பட்டது	பத்தி 13

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : சிறப்பு அனுமதி மனு (உ) எண்.678/2021.

ஸ்ரீநகரிலுள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்றத்தின் எல்.பி.ஏ.எஸ்.டபிள்யு எண்.71/2018–இல் 09.08.2019 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

விக்ரம் ஹெக்டே, சித்வான் சர்மா – மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.

ஷைலேஷ் மதியால், பார்த் அவஸ்தி, வைபவ் சபர்வால், அக்ஷய் குமார் – மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. பீலா எம். திரிவேதி அவர்களால் பகரப்பட்டது.

1. சிறப்பு நீதிப்பேராணை மனு எண்.1766/2017–இல் மனுதாரர்–மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், கற்றறிந்த தனி நீதியரசரால் பிறப்பிக்கப்பட்ட 14.05.2018 தேதியிடப்பட்ட உத்தரவை உறுதி செய்தும், எல்.பி.ஏ.எஸ்.டபிள்யு எண்.71/2018–இல் ஸ்ரீநகரிலுள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் உயர்நீதிமன்றத்தால் 09.08.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு எதிராக தற்போதைய சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. சுருக்கமாகக் கூறின், ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில நிர்வாகக் காவல்துறையில் காவலர் பதவிக்கான 2008–2009–இல் நடைபெற்ற தேர்வு நடைமுறையில் மனுதாரர் கலந்து கொண்டு மற்றும் அவருக்கு 20.08.2009 தேதியிட்ட பணி நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், மனுதாரர் 9 மாத பி.ஆர்.டி.சி. வகுப்புக்கு மணிகாம் காவல் துறை பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அதன் பிறகு, மனுதாரர் உள்பட புதிதாக நியமிக்கப்பட்ட பத்து காவலர்கள் தேடுதல் சிட்டை, புது டெல்லியிலுள்ள கைரேகைத் துறை அலுவலகம் (சி.பி.பி.பி) மற்றும் என்.சி.ஆர்.பி கிழக்கு, இயக்குநருக்கு பதிவிடுதல் மற்றும் பார்வைக்காகவும் அனுப்பப்பட்டது, மேற்சொன்ன துறை 07.12.2009 தேதியிடப்பட்ட அதன் கடிதத்தின் மூலம் க்ரல்குண்ட் காவல் நிலையத்தில் ரன்பிர் தண்டனைச் சட்டம் (ர.த.ச.) பிரிவு 379 மற்றும் வனச் சட்டம் பிரிவு 6–இன்கீழ் மனுதாரருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை எண்.52/2007–ஆக பதிவு செய்யப்பட்டது குறித்து

தெரிவித்தது. மேற்சொன்ன வழக்கு, ஹந்த்வாரா, தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன்பாக நிலுவையில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. அவரது தேர்வை இரத்து செய்வதற்காக, ஹந்த்வாரா மாவட்ட தலைமையகத்தால், பாராமுல்லா என்.கே.ஆர்., துணை காவல் துறைத் தலைவரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது, குற்றச்சாட்டுக்களின் தொகுப்பும் மற்றும் குற்றப்பத்திரிக்கையும் மனுதாரருக்கு சார்வு செய்யப்பட்டது. மேற்சொன்ன குற்ற வழக்கில் கைதுக்குப்பின் 4 நாட்கள் கழித்து மனுதாரர் பிணையில் விடப்பட்டுள்ளார் என்றும், ஆகவே குற்ற வழக்கில் ஈடுபட்டுள்ளது மனுதாரர் நன்கு அறிவார் மற்றும் அவர் தெரிந்தே அந்த விஷயத்தை மறைத்துள்ளார் என்று கூறப்படுகிறது. காவல்துறை சரிபார்த்தலின்போது விசாரணை சமயத்தில் தெளிவான அறிக்கை பெறுவதற்காக, பக்ஹ்ரிபால்–க்கு பதிலாக குண்ட்சோபோத்ரா கிராம முகவரியை மனுதாரர் காட்டினார் என்பது தெளிவாகிறது. இந்த சூழ்நிலைகளில், மனுதாரருக்கான 20.08.2009 தேதியிட்ட பணி நியமன ஆணை, 01.03.2010 தேதியிடப்பட்ட ஆணை மூலம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் பணி நியமனத்தை இரத்து செய்த மேற்சொன்ன ஆணையை எதிர்த்து சிறப்பு நீதிப்பேராணை மனு எண்.2616 என்ற நீதிப்பேராணை மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதற்கிடையில் மனுதாரர் ஹந்த்வாரா தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்ற வழக்குக்காக விசாரிக்கப்பட்டு 26.04.2011 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மூலம் விடுதலை செய்யப்பட்டார். மேற்படி மனு 18.05.2016 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் தீர்வு செய்யப்பட்டு அதில்

01.03.2010 தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவை உயர்நீதிமன்றம் நீக்கறவு செய்தது. மனுதாரரின் சூழ்நிலைக்கு நிகராக உள்ள மற்ற நபர்களுக்கும் 27.02.2012 தேதியன்று கடிதத் தகவலை கருத்திற்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவிடப்பட்டது. மறு பரிசீலனைக்குப் பிறகு, மனுதாரரின் குற்றப் பின்புலம் காரணமாக, காவல் துறை ஒழுங்கு முறை படையில் உள்ள காவலர் பதவிக்கு அவர் பொருத்தமற்றவராக காணப்படுகிறார் என மற்றவற்றிற்கிடையே கூறி ஸ்ரீநிகரிலுள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் காவல்துறை தலைமை இயக்குநர் 31.07.2017 தேதியிட்ட ஆணையைப் பிறப்பித்தார்.

4. 31.07.2017 தேதியிட்ட மேற்படி ஆணையால் பாதிப்படைந்த மனுதாரர், விளைவான பயன்களுடன் மீண்டும் பணியமர்த்தக் கோரி சிறப்பு நீதிப்பேராணை மனு எண்.1766/2017–ஐ தாக்கல் செய்துள்ளார். தனி நீதியரசர், யூனியன் டெரிடோரி , சண்டிகர் நிர்வாகம் மற்றும் பலர் – எதிர்– பிரதீப் குமார் மற்றும் ஒருவர், ((2018) 1 எஸ்.சி.சி. 797) என்ற வழக்கின் தீர்முடிவில் சார்ந்து நின்று, காவல்துறையின் படிநிலையில் உயர் அதிகாரியான காவல் துறை தலைமை இயக்குநரால் எடுக்கப்பட்ட,காவல் துறையில் மேல்முறையீட்டாளரை சேர்க்கும் தகுதியை பரிசீலிப்பது குறித்து கேள்வி எழுப்ப முடியாது என தீர்மானித்து, 14.05.2018 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் தனி அமர்வு மேற்படி நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்தது. பாதிப்படைந்த மனுதாரர் எல்.பி.ஏ–ஐ தாக்கல் செய்து, அது

நீதியை ஆயத்தில் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

5. இவ்வழக்கு தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் விரிவாக விசாரிக்கப்பட்டபோதிலும், இந்நீதிமன்றத்தின் மூணு பரிசீலனைக்குரிய குறிப்பிட்ட வினா யாதெனில், மனுதாரரின் குற்றப் பின்புலனை கருத்திற்கொண்டு அவர் காவல் படையில் பதவி வகிக்க தகுதியுடையவர் அல்ல என்ற மனுதாரரின் பதிவுருக்களை ஆராய்ந்த பின்னர் ஸ்ரீநகரிலுள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில காவல் துறைத் தலைமை இயக்குநரால் எடுக்கப்பட்ட முடிவை, மனுதாரர் குற்றவியல் வழக்கிலிருந்து விடுதலையானதன் பேரில் அவர் மீண்டும் பணியமர்த்தும்படி நிர்பந்திக்கலாமா?

6. மனுதாரருக்கு எதிராக நடந்த குற்றவியல் விசாரணையில் அரசு தரப்பு விசாரணை அதிகாரியை விசாரிக்கத் தவறிவிட்டது, அவருக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை வெளிக்கொணரத் தவறிவிட்டது மற்றும் மேற்சொன்ன வழக்கில் அவரது விடுதலை, முழுமையான விடுதலையாகக் கருதப்பட வேண்டும் என மனுதாரர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பித்தார். உரிய குற்றவியல் நீதிமன்றத்தால் அவர் விடுதலை செய்யப்பட்டதால், மனுதாரருக்கு குற்றப் பின்புலம் உள்ளது என்று அனுமானிப்பதற்கான அடிப்படையே எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு இல்லை என மேலும் அவர் சமர்ப்பித்தார்.

7. மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சமர்ப்பிக்கப்பட்ட வாதங்களை மதிப்பீடு செய்யும்பொருட்டு,

ஹந்த்வாராவில் உள்ள தலைமைக் குற்றவிய நடுவர் நீதிமன்றத்தால் 26.04.2011–இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சம்பந்தப்பட்ட பகுதிகளை கீழே தருவது முறையாகும். அதில் மனுதாரர் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

"விசாரணை அதிகாரி முன்னிலைப்படுத்தப்படவோ அல்லது விசாரிக்கப்படவோ இல்லை என்ற முக்கிய முரண்பாடு குறித்து பதிலளிக்கப்படவோ அல்லது களத்திட்டங்கள் நிரூபிக்கப்படவோ இல்லை என்பதால் அது அரசு தரப்பு வழக்கின் சட்டப்படி குறைபாடு ஆகும். மேலும் மரங்கள் கைப்பற்றப்பட்டது சாட்சிகளால் நிரூபிக்கப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர் வனத்தில் திருட்டைச் செய்துள்ளார் என்றும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வசம் வில்லோ மரங்கள் காணப்பட்டது என்றும் எந்த சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை. முரண்பாடான சாட்சியங்களின் அடிப்படையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சந்தேகத்தின் பலன் உள்ளது என்பதால், அவரை விடுதலை செய்ய முடியாது. குற்றஞ்சாட்டப்பவர்களுக்கு எதிராக ர.த.ச., பிரிவு 379, வனச்சட்டம் பிரிவு 6–இன் கூறுகளை நிறைவேற்றிட அரசு தரப்பு முற்றிலும் தவறியது. ஆகையால், அரசு தரப்பு தோல்வியுற்றது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ர.த.ச., பிரிவு 379 மற்றும் வனச்சட்டம் பிரிவு 6–இன் கீழான குற்றச்சாட்டிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுகிறார். குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்கப்பட்டது. அவர்களது பிணை பத்திரம் மற்றும் தனிப்பட்ட பிணை பத்திரங்கள் விடுவிக்கப்படுகிறது. வனத்துறையால்

கைப்பற்றுதல் நடவடிக்கை துவக்கப்பட்டதால், மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டது. முறையாக முடிவு செய்த பின்னர் வழக்கு பதிவுருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது."

8. குற்றவியல் நடைமுறை சட்டத்தில் எங்குமே "முழுமையான விடுதலை" என்ற சொற்றொடர் வரையறுக்கப்படவில்லை என்ற சங்கதிகளுக்கப்பால், மனுதாரர் விசாரிக்கப்பட்டு பதிவாவணத்தில் கொண்டு வரப்பட்டுள்ள முரண்பட்ட சாட்சியத்தை கருத்தில் கொண்டு பார்க்கையில், சந்தேகத்தின் பலனானது மனுதாரருக்கு அளிக்கப்பட்டது, மேலும் அரசு தரப்பால் விசாரணை அதிகாரி விசாரிக்கப்படவில்லை என்பதற்காக குற்றவியல் வழக்கில் மேற்சொன்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

9. தற்போதைய வழக்கில் உள்ளடங்கியுள்ள அதே போன்ற பிரச்சனை, புது டெல்லி, காவல் துறை ஆணையர் மற்றும் ஒருவர் – எதிர்– மெஹர் சிங், ((2013) 7 எஸ்.சி.சி. 685) என்ற வழக்கிலும் இந்நீதிமன்றம் பின்வருமாறு கருத்துரைத்தது:–

"25. எஸ்.சமுத்திரம் [காவல் துறைத் தலைவர் –எதிர்– எஸ்.சமுத்திரம், (2013) 1 எஸ்.சி.சி. 598 : (2013) 1 எஸ்.சி.சி. (குற்றவியல்) 566 : (2013) 1 எஸ்.சி.சி. (எல் & எஸ்) 229] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் "முழுமையான விடுதலை" என்ற சொற்றொடரை ஆராய்ந்தது. அந்த வழக்கில் இந்நீதிமன்றம் காவல் துறை அதிகாரிக்கு எதிராக தொடங்கப்பட்ட ஒழுங்கு முறை நடவடிக்கைகளின் சூழல் குறித்து விவாதிக்கிறது. அவருக்கெதிராக இ.த.ச. பிரிவு 509–இன்கீழ் குற்ற வழக்கு

நிலுவையில் இருந்தது. முக்கியமான சாட்சிகள் விசாரிக்கப்படாததால், அவர் அந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்டார். குற்ற வழக்கு நடத்துவதில் கடுமையான பிழை இருந்துள்ளது. இரு முக்கிய சாட்சிகளும் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். அதே போன்ற சங்கதி சூழ்நிலை கொண்ட இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையான ஆர்.பி.ஐ –எதிர்– போபால் சிங் பஞ்சால் [(1994) 1 எஸ்.சி.சி. 541 : 1994 எஸ்.சி.சி. (எல் & எஸ்) 594 : (1994) 26 ஏ.டி.சி. 619] என்ற தீர்ப்புரை குறித்துக் காட்டி, பணியாளருக்கு சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட்டு அவர் குற்றவியல் வழக்கிலிருந்து விடுதலையானார் என்ற காரணத்தின் பேரில், பணியாளரை மீண்டும் பணியமர்த்த மறுக்கும் வங்கியின் நடவடிக்கையை இந்நீதிமன்றம் உறுதி செய்தது. எனவே, இது முழுமையான விடுதலை அல்ல என்றும் துறை ரீதியான நடவடிக்கையில் விதிக்கப்பட்ட தண்டனையை நீதிமன்றம் நீக்கறவு செய்தது நியாயமல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தது. "முழுமையான விடுதலை", "குற்றச்சாட்டிலிருந்து விடுதலை' மற்றும் 'முற்றிலும் விடுவிப்பு" போன்ற சொற்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டம் அல்லது தண்டனைச் சட்டம் அறியாத ஒன்றாகும் என்று நீதிமன்றம் கருத்துரைத்தது. அவைகள் நீதிமன்ற தீர்ப்புகளால் உருவாக்கப்பட்டவை. "முழுமையாக விடுவிக்கப்பட்டார்" என்ற சொல்லுக்கான பொருளை வரையறை செய்வது மிகக் கடினம். அரசுத்தரப்பு வழக்கு முழுவதையும் பரிசீலித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டாலும்,

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பு முற்றிலும் தவறினாலும், குற்றஞ்சாட்டப்பட்டவர் முழுமையாக விடுவிக்கப்பட்டார் என்று கூறப்படலாம் என இந்நீதிமன்றம் தெரிவித்தது.

26. மேற்சொன்னவற்றின் அடிப்படையில், மோசமான நடத்தை அல்லது கடமை தவறுதல் ஆகிய குற்றம் செய்பவர்கள் அல்லது ஒழுக்ககேடுடைய குற்றம் செய்பவர்கள் இருந்தால், அவர்கள் துறைக்கு களங்கம் விளைவிப்பார்கள் என்ற காரணத்தால் துறையை விட்டு வெளியே வைத்திருப்பதுதான் துரையின் நடவடிக்கைகள் என்பதாலும் துறையில் நுழையும் நபரின் அதாவது பணி நியாமானம் செய்யப்படும்போது, நிச்சயமாக மேற்சொன்ன கொள்கைகள் மிகக் கடுமையாக பின்பற்றப்படவேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும். எந்த ஒரு நபருக்கெதிராக ஒழுக்கக் கேடு என்கிற கடுமையான வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் தொழில்நுட்ப காரணங்களால் விடுவிக்கப்பட்டாலோ அல்லது அதே குற்றச்சாட்டில் விடுதலை செய்யப்பட்டாலோ அந்த விடுதலை முறையானதல்ல என்று காணப்பட்டால், குழுவிற்கு அவரது பணி நியமனத்தை இரத்து செய்ய அதிகாரம் உள்ளது என்பதாகும். ஒழுங்குமுறை காவல்படை என்பது பொது நலனிற்கு உட்பட்டது என்பதால் அதில் ஒரு நபர் நியமிக்கப்படும்போது கண்டிப்பாக விதிமுறைகள் பயன்படுத்தப்படவேண்டும்."

10. ஆய்வுக்குழுவின் முடிவு தீயநோக்குடையதாகவோ அல்லது வெளிப்புறக் கருத்தாய்வுகளால் செயல்படுத்தப்படுவதாகவோ இருந்தால் அதை கேள்விக்குள்ளாக்க முடியாது என்று கருத்துரைக்கப்பட்டது.

"35. காவல் படை என்பது ஒழுங்கு முறை படை ஆகும். சமூகத்தில், சட்டம், ஒழுங்கு மற்றும் பொது அமைதி ஆகியவற்றை பராமரிக்கும் பெரும் பொறுப்பை அது வகிக்கிறது. மக்கள் அதன் மீது பெரும் நம்பிக்கையும், உறுதியும் வைத்துள்ளனர். அது மதிப்புமிக்க நம்பிக்கையாகும். காவல் படையில் சேர விரும்பும் விண்ணப்பதாரர் மிக நாணயமுடையவராக இருக்கவேண்டும். அவர் குற்றமற்ற நடத்தையும் மற்றும் நேர்மையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும். குற்ற முன்னோடிகளை கொண்டுள்ள நபர் இந்த வகைப்பாட்டில் பொருந்தமாட்டார். அவர் குற்ற வழக்கில் விடுதலை செய்யப்பட்டிருந்தாலோ அல்லது குற்ற வழக்கில் விடுவிக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்ற நிகழ்வுகளில் ஈடுபடும் வாய்ப்பு உள்ள காரணத்தால் காவல்படையின் கட்டுப்பாட்டிற்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவர் வழக்கில் முழுவதுமாக மன்னிக்கப்பட்டாரா என அந்த விடுதலை அல்லது விடுவிக்கப்பட்ட ஆணை பரிசீலிக்கப்பட வேண்டியதாகும். இந்த விஷயங்களில் முடிவு எடுப்பதை, எனவே இவ்வழக்கை தீர்மானிக்கும் பணியை ஆய்வுக் குழுவிற்கு நிலை ஆணை அளித்துள்ளது. அது தீய நோக்குடையதாக இருந்தாலன்றி, ஆய்வுக்குழுவின் முடிவு இறுதியானதாக கருதப்படவேண்டும். அண்மையில் காவல் படையின் பிம்பம் களங்கப்பட்டுள்ளது.

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, தன்னிச்சையாக காவல் துறையினர் பொதுவெளியில் நடந்து கொள்கிறார்கள் மற்றும் அது கவலைப்படும் விஷயமாகும். காவல் படையின் நற்பெயர் சீர்குலைந்துள்ளது. அத்தகைய சூழ்நிலையில் அதன் நம்பகத்தன்மையை ஊடுருவி நுழையக்கூடிய நபர்களை காவல் படையில் நுழையாவண்ணம் உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆய்வுக்குழு போன்ற அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் ஆற்றலை நீர்த்துப் போகச் செய்ய நாங்கள் விரும்பவில்லை. அதே நேரத்தில், அதன் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையின் முக்கியத்துவத்தை ஆய்வுக்குழு உணர வேண்டும் மற்றும் ஒரே மாதிரி எல்லா விண்ணப்பதாரர்களையும் சரிசமாக கருத வேண்டும்.

36. ஆய்வுக்குழுவின் நடவடிக்கைகள், தன்னிச்சையானது, வழிகாட்டலற்ற மற்றும் தடையற்றது என எதிர் வாதம் செய்யப்பட்டுள்ளது, ஆனால் தற்போதைய நிகழ்வுகளில், நாங்கள் எந்த சான்றையும் காணவில்லை. இருப்பினும், ஆய்வுக்குழுவால் கடுமையான குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர்கள் நியமனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சில நிகழ்வுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 14–இல் கூறப்பட்டுள்ள சூழ்நிலைக் கோட்பாடு அத்தகைய வழக்குகளில் நன்கு அறுதியிடப்பட்டன. இக்கோட்பாடு எதிர்மறை சமநிலையை வெளிப்படுத்தாது (பியூல்ஜித் கவுர் [பியூல்ஜித் கவுர் –எதிர்– பஞ்சாப் மாநில அரசு, (2010) 11 எஸ்.சி.சி.

455]). இது நேர்மறை கோட்பாடாக குறிப்பிடப்பட்டுள்ளதால் அது சட்டத்திற்கு முரணையோ அல்லது மோசடியையோ நிலை நிறுத்தாது. சந்தேகப் பின்புலம் உள்ள நபர்கள் காவல்துறையில் நுழையக் கூடாது என்பதை உறுதி செய்யும் உணரத்தக்க கொள்கையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக்குழு, கொள்கையிலிருந்து விலகினால், விலக்கு அளித்தால், விரும்பத்தகாத நபர்களை நுழைய அனுமதித்தால், அது சந்தேகத்துக்கிடமின்றி காவல் துறைக்கு பணி செய்யாமல் கடுமையான, செயல் செய்த குற்றமாகக் கருதப்படும் ஆனால் அத்தகைய வழக்குகளை சார்ந்து எதிர்மேல்முறையீட்டாளர்களை அனுமதிப்பதன் மூலம் சட்ட விரோதமான செயலை நிலை நிறுத்த நாங்கள் அனுமதிக்க முடியாது. காவல் படையின் பயனை எவ்விதத்திலும் ஆய்வுக்குழு சமரசம் செய்து கொண்டுள்ளதா மற்றும் அவ்விதம் அது செய்யப்பட்டிருப்பதாகக் கண்டால் பரிகாரத்திற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதை டெல்லி காவல் துறை ஆணையாளர் தான் முடிவு செய்ய வேண்டும். இந்த குற்றச்சாட்டு குறித்து உயர்மட்ட அளவில் ஆழ்ந்து ஆராய்தலை போது நலன் கோருகிறது, ஒருவேளை அத்தகைய கொள்கை விலகள்தான் காவல் துறையின் அதிகப்படியான அத்துமீறல்களுக்கு காரணமாகலாம். டெல்லி காவல் துறை ஆணையாளர், நிலை ஆணைகளில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை கடுமையாக நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளான

குற்றச்சாட்டுகளின் பொருள் இருந்தால் மட்டும் விசாரிப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்."

11. "முழுமையான விடுதலை" என்ற சொல் பிற வழக்குகளிலும் ஆய்வுக்கு வந்துள்ளது, அதாவது, இந்திய ரிசர்வ் வங்கி, நிர்வாகம், புது டெல்லி –எதிர்– போபால் சிங் பஞ்சால் (1994) 1 எஸ்.சி.சி. 541 மற்றும் ஆர்.பி.கபூர் –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் ஒருவர், ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 787, அதில், விடுதலை செய்ததால் மட்டுமே பணியாளரை மீண்டும் பணியமர்த்த உரியவராக்காது என்று மற்றவற்றிற்கிடையே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த விடுதலை, முறையானதாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறாக, "முழுமையான விடுதலை", "குற்றச்சாட்டிலிருந்து விடுதலை" மற்றும் "முற்றிலும் விடுவிப்பு" ஆகிய சொற்றொடர்கள் குற்றவியல் நடைமுறை சட்டத்திற்கோ அல்லது தண்டனைச் சட்டத்திற்கோ அறியாதது மற்றும் "முழுமையான விடுதலை" என்ற சொற்றொடரை குறிப்பிட்டு வரையறுப்பது கடினம்.

12. மேற்படி பிரதீப் குமார் வழக்கிலும் கூட, ஒரு நபர் விடுதலை செய்யப்பட்டாலோ அல்லது விடுவிக்கப்பட்டாலோ, அவர் தவறாக ஈடுபட்டார் என்றோ அல்லது, அவருக்கு குற்றப் பின்னணி இல்லை என்றோ பெரும்பாலும் முடிவுக்கு வர முடியாது என்பது வலியுறுத்தப்பட்டது. அதில் சுருக்கமாக சொல்லப்பட்ட கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளது:–

"10. குற்றவியல் வழக்கில் விடுதலை செய்யப்பட்டது என்பது சம்பந்தப்பட்ட பதவியில் விண்ணப்பதாரரின் தகுதியை முடிவு

செய்யாது. ஒரு நபர் விடுதலை செய்யப்பட்டாலோ அல்லது விடுவிக்கப்பட்டாலோ அவர் தவறாக ஈடுபட்டார் என்றோ அல்லது அவருக்கு குற்றப் பின்னணி இல்லை என்றோ எப்போது முடிவுக்கு வர இயலாது. அது முழுமையான விடுதலையாக இருந்தாலன்றி, விண்ணப்பதாரர் வழக்கில் பயனை கோர முடியாது. முழுமையான விடுதலை என்பது என்னவென்று இந்நீதிமன்றத்தால் காவல்துறைத் தலைவர் –எதிர்– எஸ்.சமுத்திரம் என்ற வழக்கில் [காவல்துறைத் தலைவர் –எதிர்– எஸ்.சமுத்திரம், (2013) 1 எஸ்.சி.சி. 598 : (2013) 1 எஸ்.சி.சி. (குற்றவியல்) 566 : (2013) 1 எஸ்.சி.சி. (எல் & எஸ்) 229], நீதிமன்றத்தால் பின்வருமாறு முடிவு செய்யப்பட்டுள்ளது: (எஸ்.சி.சி. பக்கம் 609, பத்தி 24)

"24. "முழுமையான விடுதலை" என்ற சொற்றொடரின் பொருள் குறித்து, ஆர்.பி.ஐ –எதிர்– போபால் சிங் பஞ்சால் [ஆர்.பி.ஐ. –எதிர்– போபால்சிங் பஞ்சால், (1994) 1 எஸ்.சி.சி. 541 : 1994 எஸ்.சி.சி. (எல் & எஸ்) 594], என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வந்துள்ளது. ஒழுங்கு நடவடிக்கைகளில் குற்றவியல் நீதிமன்றத்தால் முழுமையான விடுதலை குறித்து குறிப்பிடும் விதிமுறைகள் 46 (4)–ன் விளைவு இந்நீதிமன்றம் பரிசீலித்தது. விடுவிக்கப்பட்டதால் மட்டுமே பணியாளர் மீண்டும் பணியமர்த்த தகுதி பெற செய்யாது என்றும், அந்த விடுதலை முறையானதாக இருத்தல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. "முழுமையான விடுதலை", "குற்றச்சாட்டிலிருந்து விடுதலை" மற்றும் "முற்றிலும் விடுவிப்பு" ஆகியவை குற்றவியல் நடைமுறை சட்டத்தாலோ

அல்லது தண்டனைச் சட்டத்தாலோ அறியப்படாத ஒன்று. அவை நீதிமன்றங்களின் தீர்ப்புகளால் உருவாக்கப்பட்டவை. "முழுமையான விடுதலை" என்ற சொல்லுக்கான பொருளை வரையறை செய்வது மிகக் கடினம். அரசு தரப்பு வழக்கு முழுவதையும் பரிசீலித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டாலோ மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பு முற்றிலும் தவறினாலோ, குற்றஞ்சாட்டப்பட்டவர் முழுமையாக விடுவிக்கப்பட்டார் என்று கூறப்படலாம்."

11. .....

12. .....

13. குற்ற வழக்கில் விடுதலையானது பதிவிற்கு நியமனம் செய்யப்பட தானாகவே உரிமை உடையவரலல்ல என்பது நன்கு அறுதியிடப்பட்ட ஒன்றாகும். இருப்பினும், அவரது முன்நடத்தைகளை கருத்திற்கொண்டு, பதவியில் நியமிப்பதற்கு அவர் தகுதியுடையவரா? என்பதையும் பரிசீலிப்பது பணியமர்த்துனரின் விருப்பமாகும். இந்நீதிமன்றத்தின் வழக்குகளான மேஹர் சிங் [காவல்துறை ஆணையாளர் –எதிர்– மேஹர் சிங், (2013) 7 எஸ்.சி.சி. 685 : (2013) 3 எஸ்.சி.சி. (குற்றவியல்) 669 : (2013) 2 எஸ்.சி.சி. (எல் & எஸ்) 910] மற்றும் பர்வேஸ் கான் [மத்தியபிரதேச மாநில அரசு –எதிர்– பர்வேஸ் கான், (2015) 2 எஸ்.சி.சி. 591 : (2015) 1 எஸ்.சி.சி. (எல் & எஸ்) 544]–இல் கண்டுள்ள கருத்துகளின்படி, காவல்துறை பணிக்கு நியமிக்கப்படும்

விண்ணப்பதாரர் குற்றமற்ற நடத்தையும் மற்றும் நேர்மையுடையவராகவும் இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. குற்ற முன்னோடி உள்ள நபர்கள் இந்த வகைப்பாட்டிற்குள் பொருந்த மாட்டார்கள். அவர் விடுதலை செய்யப்பட்டாலோ அல்லது விடுவிக்கப்பட்டாலோ, அவர் முழுமையாக விடுதலை செய்யப்பட்டார்/முற்றிலும் விடுவிக்கப்பட்டார் என்று ஊகிக்க முடியாது. அது தீய நோக்கமுடையது என்று வெளிப்பட்டாலன்றி, ஆய்வுக்குழுவின் முடிவை இறுதியானதாக கருத்தில் கொள்ளப்படவேண்டும். அதன் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையின் முக்கியத்துவத்திற்கு பாத்திரமாக ஆய்வுக்குழு இருத்தல் வேண்டும் மற்றும் நன்னடத்தை உள்ள நபரைப் பரிசீலிக்க வேண்டும்."

13. அவதார் சிங் –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் பலர், (2016) 8 எஸ்.சி.சி. 471, என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் மூவர் அமர்வு குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது. அது பத்தி 38.5–இல் குறிப்பிடப்பட்டதாவது:

"38.5. முடிவடைந்த ஒரு குற்றவியல் வழக்கை குறித்து பணியாளர் உண்மையாக அறிவித்திருந்தால் அவரது முன்நடத்தையை பரிசீலிக்கும் உரிமை பணியமர்த்துனருக்கு உள்ளது, மேலும் அவரை கட்டாயப்படுத்த முடியாது."

14. மேற்சொன்ன வழக்குகள் அனைத்திலும், காவல் படைக்கு தேவைப்படுகின்ற நேர்மை உயர்ந்த நடத்தை ஆகியவை பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. காவல் படையில் சேருவதற்கான

மனுதாரருக்குள்ள தகுதி குறித்து பரிசீலிக்க படிநிலை அமைப்பில் உயர் அதிகாரியான காவல் துறைத் தலைமை இயக்குநர் சிறந்த நீதிபதி என்று கூறிய தனி அமர்வின் உத்தரவுகளை உறுதி செய்கையில், ஒவ்வொரு பிரச்சனைகளையும் உள்ளடக்கிய அனைத்து அம்சத்தையும் உயர்நீதிமன்றம் அதன் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மூலம் விரிவாக விவாதித்துள்ளது. எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நியாயமானது மற்றும் முறையாகவும் இருப்பதால், அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 136–இன்கீழ் உள்ள அதிகார வரம்பை பயன்படுத்தி அதில் தலையிட நாங்கள் விரும்பவில்லை.

15. அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 136–இன்கீழ் உள்ள ஆழ்வாரை மிகப்பெரிதாயினும் அதன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரம் மிகச் சிறப்பானது மற்றும் தனிச் சிறப்பானது என்பதால் அது அரிதான மற்றும் விதிவிலக்கான வழக்குகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பது சட்டத்தில் நன்கு அறியப்பட்ட நிலைப்பாடாகும். உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் எவ்வித குறைபாடோ

அல்லது சட்டமுரணோ நாங்கள் காணவில்லை என்பதால் தற்போதைய மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும், அதன்படி தள்ளுபடி செய்யப்படுகிறது.

சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "